OS 174/2024

வா.சா. 2 சங்கர் த/பெ ரங்கநாதன்

நாள் 12.11.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. வாதி சேகர் எந்த ஊர் என்றால் காமக்கூர் ஆகும். நானும் அதே ஊரைச் சார்ந்தவர் தான். வாதி எனக்கு உறவினர் இல்லை ஊர்க்காரர். வாதியை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 30 ஆண்டுகளாக தெரியும். வாதி யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் ரமேஷ் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்திருக்கிறார். ரமேஷ் எந்த ஊர் என்றால் ஏரிக்குப்பம் கிராமத்தை சார்ந்தவர். பிரதிவாதியை எனக்கு 6 வருடங்களாக தெரியும். 2019ல் இருந்து தெரியும் பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் பிரதிவாதியும் அவருக்கு பக்கத்து வீட்டுக்காரர் அர்ஜீன் என்பவருக்கும் நிலம் வாங்குவதில் பிரச்சனை ஏற்பட்டது அதற்காக சென்ற போது பழக்கம் ஏற்பட்டது. எனக்கும் அந்த பிரச்சனைக்கும் சம்மந்தம் இல்லை ஊர் பெரியவர் என்ற முறையில் தெரியும். அதற்கு பிறகு பிரதிவாதி சம்மந்தமான பிரச்சனைக்கு நான் சென்று இருக்கிறேனா என்றால் இந்த வழக்கு போடுவதற்கு முன்பாக 2 மாதத்திற்கு முன்பு பணம் கேட்பதற்காக சென்றிருந்தேன். அதற்கு முன்னர் பார்த்ததில்லை பேசியதும் இல்லை.

2. பாண்டு எங்கு எழுதப்பட்டது என்றால் பணம் கொடுத்த சேகர் வீட்டில் எழுதப்பட்டது. மேற்படி விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றாலும் சேகருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பாண்டை யார் எழுதியது என்றால் எங்கள் ஊரைச்சார்ந்த பழனி என்பவர் எழுதினார். எத்தனை பாண்டு எழுதப்பட்டது என்றால் ஒரே தேதியில் 2 பாண்டு எழுதப்பட்டது. பாண்டில் என்ன விவரம் எழுதினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1 லட்சம் ரூபாய்க்கு எ பாண்டு எழுதப்பட்டது. நான் பாண்டு எழுதிய இடத்தில் இல்லை என்றாலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் ஊரில் பெரியவர் என்ற முறையில் பல பேருக்கு பஞ்சாயத்து செய்து இருக்கிறேன் என்றால் சரிதான். என்னுடன் சாட்சி கையொப்பம் செய்துள்ள முருகன் எங்கள் ஊரைச்சார்ந்தவர். எனக்கு சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வரவில்லை வழக்கறிஞர் சொல்லி சேகர் என்னை அழைத்து வந்தார்.

3. பாண்டு எந்த தேதியில் என்ன கிழமையில் எந்த நேரத்தில் எழுதப்பட்டது என்றால் 31.10.2021 தேதி ஆகும். நேரம் காலை 10.00 மணி, கிழமை நியாபகம் இல்லை. நான் மேலே சொன்ன தேதி நேரத்தில் நான் ஆரணியில் இருந்ததற்கான ஆதாரம் என்னிடம் இருக்கிறது என்றால் இல்லை. பணம் வாங்க வரும் போது ரமேஷ் மட்டும் தான் வந்தார் அவருடன் யாரும் வரவில்லை. தாவா பாண்டு வாதியால் போர்ஜெரியாக தயார் செய்யப்பட்டது என்றாலும் ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பணம் கொடுத்ததாகவும் பாண்டு எழுதியதாகவும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.